www.agaram.lk

**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**ஆண்டிறுதிப் பரீட்சை**
**சித்திரக்கலை – 2019**

**தரம் 10** **நேரம்: 1 மணித்தியாலம்**

பகுதி – I

- எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலே விடை எழுதுக.
- கீழே தரப்பட்டுள்ள ஒளிப்படத்தைப் பயன்படுத்தி 1 தொக்கம் 5 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

Agaram.LK - Keep your dreams alive!



Agaram.LK - Keep your dreams alive!

1) கம்பளைக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டிடம் ……………………….. ஆகும்.

2) இக் கட்டிடம் சேனாதிலங்கார அமைச்சரின் ஆலோசனைப்படி ……………………… என்னும் கலைஞரால் நிர்மாணிக்கப்பட்டது.

3) இதன் நிர்மாணத்திற்காக …………………, சுண்ணச்சாந்து ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன.

4) இக்கட்டடம் கட்டப்பட்ட பொழுது ………………………. மாடிகளைக் கொண்டதாக அமைந்திருந்ததாக நூல்களில் பதிவாகியுள்ளது.

5) வெளிப்புறச் சுவரில் அமைக்கப்பட்டுள்ள ………………………. உருவங்களும், தூண்களும் விகாரைக்கு அழகு சேர்க்கும் அம்சங்களாகும்.

**6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

6. பௌத்தமத மறுமலர்ச்சிக்காக புதிய முறையில் ஓவியங்களை வரைந்த கொழும்பு நகர்க்கால ஓவியர் யார்?

…………………………………………………………………………………………

agaram.lk

7. கிறிஸ்தவ கருப்பொருள்களைச் சித்தரிக்கும் போது ஐரோப்பிய பண்பாடும் நிலவுருவில் இலங்கைப் பின்னணியையும் தனது சித்திரங்களில் கையாண்ட ஓவியர் யார்?

..........................................................................................................

8. இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலில் காணப்படும் ''அகத்தியரும் விநாயகரும்'' என்ற ஓவியத்தை வரைந்த கலைஞர் யார்?

..........................................................................................................

9. ''பரிதி வட்டம் வீசுபவன்'' என்னும் சிற்பத்தின் மூலப்படைப்பு செய்யப்பட்ட ஊடகம் எது? .

..........................................................................................................

10. கலை விமர்சகர்களின் அவதானத்துக்குட்பட்ட ஆக்கங்களிடையே ஹரப்பா உலோக வார்ப்பு தொழில் நுட்பத்திறனை வெளிப்படுத்தும் சிற்பம் யாது?

..........................................................................................................

- **11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. ''வீனஸ்'' சிற்பத்தை வடிவமைத்த கலைஞன்.

    1. அன்ரிசொவ்  2. அலெக்சான்டொரஸ்  3. பீடியஸ்  4. பிரக்சிடெலஸ்

12. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட சிவபெருமானின் மூலத்தைப் புலப்படுத்துவதாக ஜோன் மார்ஷல் குறிப்பிடும் இலட்சினை.

    1. திமிலுடன் கூடிய எருது 2.பூசகர் உருவம்  3. மனித முண்டம்  4. கொம்புத்தெய்வம்

13. தம்புள்ள விகாரை ஓவியங்களுள் வரலாற்று நிகழ்வைச் சித்தரிப்பது.

    1. விஜயனின் வருகை  2. மாரயுத்தம்  3. சுவிசி விவரணய

    4. ஜேதவனத்தை பூசையாக வழங்குதல்

14. தலதா மாளிகை பத்திரிப்பு வேலையைச் செய்த தென்னிந்திய சிற்பி.

    1. தெய்வேந்திர மூலாச்சாரியார்  2. தெல்மட மூலாச்சாரியார்

    3. ஸ்தபதிராயர்  4. கணேஸ்வராச்சாரியார்

15. மேள வாத்தியக்காரர் கண்ட கனவு ஒன்றின் பிரதிபலனாக கதிர்காம கடவுளுக்கு அர்ப்பணிப்பாக நிர்மாணிக்கப்பட்டது.

    1. தலதாமாளிகை  2. கடலதெனிய விகாரை

    3. லங்காதிலக விகாரை  4. எம்பக்க தேவாலயம்

- **16 தொடக்கம் 20 வரையில் தரப்பட்ட ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஒரு வாக்கியம் வீதம் எழுதுக.**

16. லித்தோகிறபிக்...........................................................................................

17. டெம்பரா....................................................................................................

18. முப்பரிமாணம் ...........................................................................................

Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

19. சலவைக்கல் ………………………………………………………………………………

20. குளிர் வர்ணம் ……………………………………………………………………………..

- **21 தொடக்கம் 25 வரையில் தரப்பட்டுள்ள ஒளிப்படப் பகுதிகளுடனான நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவை எதிரிலுள்ள A,B,C,D,E ஆகிய உருக்களில் இருந்து தெரிவு செய்து அதனை குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தினைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

21.  (………)

 A

22.  (……..)

 B

23.  (………)

 C

24.  (……..)

 D

25.  (……)

 E

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

- **26 தொடக்கம் 30 வரையிலுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.**

26. ஜோர்ச்கீற் என்ற ஓவியரின் கோதமி விகாரை ஓவியங்களுள் மாரா யுத்தம் பிக்காசோவின் ...................... கலைப்பண்பை வெளிக்காட்டி நிற்கின்றது.

27. சட்டநாதர் சிவன் கோவிலில் வரையப்பட்ட கூவும் "வெள்ளைச் சேவல்" என்ற ஓவியம் .........................................என்ற கலைஞரது ஆக்கமாகும்.

28. மிலானைச் சேர்ந்த மரியா டெலா கிரேசி டொமினிக்கான் துறவிகள் இல்லச்சுவரில் டெம்பரா முறையில் ..............................................ஓவியம் வரையப்பட்டுள்ளது.

29. கேமமாலாவும் நந்தகுமாரனும் புனித தந்தத்தை இலங்கைக்கு கொண்டு வரும் காட்சியை களனி விகாரையில் வரைந்த ஓவியர் ....................................... ஆவார்.

30. மைக்கல் அஞ்சலோவினால் செதுக்கப்பட்ட "பியெட்டா" என்ற சிற்பம் ................................ தேவாலயத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

- **31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்களுக்கு F,G,H,I,J ஆகிய ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.**


F


G


H


I


J

31. F என்ற எழுத்தினால் காட்டப்பட்ட பாற்கல்லினால் நிர்மாணிக்கப்பட்ட இச் சிற்பம் ......................... எனப்படுகிறது

32. G என்ற எழுத்தினால் காட்டப்படும் எகிப்திய சிற்பமானது ............................ ஊடகத்தினால் ஆக்கப்பட்டது.

33. H என்ற எழுத்தினால் காட்டப்பட்ட பௌத்த ஆலயம் கணேஸ்வராச்சாரியார் என்ற கலைஞரால் நிர்மாணிக்கப்பட்டதாகும். இது ............................என அழைக்கப்படுகின்றது.

34. I எழுத்தினால் காட்டப்படும் மெதவெல விகாரை ............................மீது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

35. J என்ற ஓவியம் ரபாயேலினால் வரையப்பட்டதாகும் இவ் ஓவியம் .................... ஆகும்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

**இங்கு காணப்படும் ஓவியத்தை இனங்கண்டு அதன் கலைப்பபண்புகளை பகுப்பாய்வு செய்யும் விதத்தில் 36 தொடக்கம் 40 வரை தரப்பட்டுள்ள உப தலைப்புக்களுக்கு அமைவாக பொருளுள்ள ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**



36. கருப்பொருள் ……………………………………………………………………………….

……………………………………………………………………………………………….

37. வரைந்த கலைஞர் ……………………………………………………………………………

……………………………………………………………………………………………….

38. காணப்படும் இடம் …………………………………………………………………………

……………………………………………………………………………………………….

39. உணர்வு வெளிப்பாடு ………………………………………………………………………

………………………………………………………………………………………………..

40. வர்ணப்பிரயோகம் …………………………………………………………………………

………………………………………………………………………………………………..

(40X1=40புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

www.agaram.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
ஆண்டிறுதிப் பரீட்சை
சித்திரக்கலை – 2019

தரம் 10 நேரம்: 2 மணித்தியாலம்

பகுதி – II

**முக்கியம்::-**

- வரைதாளின் பின்பக்கத்தில் இடதுபக்க மேல் மூலையில் உங்கள் சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுக.
- நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பஸ்ரல் வர்ணம், உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு ஊடகத்தினையும் பயன்படுத்த முடியும்.
- பரீட்சை மேற்பார்வையாளிடம் ஒப்படைக்கும் போது உங்கள் வரைதல் தாள் உலா்ந்திருக்க வேண்டும்.

<u>சுயாதீன ரேகைச் சித்திரம் வரைதல்</u>

➢ உங்களுக்கு முன்னாலுள்ள பொருள்களை அவதானிக்குக.
1. பருமட்டான தாளைப் பயன்படுத்தி பூர்வாங்க பரும்படிப்படத்தை வரைக.
2. நீங்கள் காணும் விதத்தில் பொருள்களை வரைந்து வா்ணந்தீட்டுக. இதற்கு வெள்ளை வரைதற் தாளைப் பயன்படுத்துக.

➢ இரண்டு வரைதல்களையும் ஒன்றாக இணைத்து மேற்பாா்வையாளா்களிடம் ஒப்படைக்குக.

➢ உங்கள் வரைதலை மதப்பிடும்போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும் என்பதைக் கவத்தில் கொள்க.
- சுயாதீன ரேகை கற்கை :-
  1. பரும்படியான தாளிலுள்ள பூா்வாங்க பரும்படிப் படத்தில் உரிய ஊடகத்தைக் கையாளும் உங்கள் திறன்
- வா்ணச் சித்திரம் :-
  2. தளத்துக்கு உதந்ததாக கலைநுட்பத்துடன் பொருட்கள் தொகுக்கப்பட்டிருத்தல்
  3. அளவிடைகள் , தூரநோக்கு , முப்பரிமாண விளைவு பற்றிய உமது விளக்கம்
  4. தரப்பட்டுள்ள பொருள்களின் பண்புகளை எடுத்துக் காட்டல்
  5. வா்ண ஊடகங்களை கையாளும் திறன்
  6. ஒட்டு மொத்த நோ்த்தியும் பொருத்தமான பின்னணியும்

**மிகமுக்கியம் :**

பொருள்களின் தொகுயை வைத்துள்ள பலகையைப் பெரிய அளவில் வரையத் தேவையில்லை. பலகையின் அளவைப் பொருள்களின் தொகுதிக்குப் பொருந்தும் முறையில் சீராக மாற்றி வரைவதற்கு உங்களிற்கு சுதந்திரம் உண்டு.

(30புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk


www.agaram.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
ஆண்டிறுதிப் பரீட்சை
சித்திரக்கலை – 2019

தரம் 10 நேரம்: 2 மணித்தியாலம்

பகுதி 2

ஆசிரியர்களுக்கு மட்டும் பொருட்கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காக



Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

**தேவையான பொருட்கள்**

1. பெட்டி
2. பிளாஸ்ரிக் குவளை
3. பப்பாசிப்பழம்
4. சீத்தைத்துணி
5. செவ்வரத்தம் பூவுடனான கிளை

agaram.lk

www.agaram.lk

**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**ஆண்டிறுதிப் பரீட்சை**
**சித்திரக்கலை – 2019**

**தரம் 10** **நேரம்: 2 மணித்தியாலம்**

## பகுதி – III

**முக்கியம்::-**

- வரைதாளின் பின்பக்கத்தில் இடதுபக்க மேல் மூலையில் உங்கள் சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுக.
- நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பஸ்ரல் வர்ணம், உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு ஊடகத்தினையும் பயன்படுத்த முடியும்.
- பரீட்சை மேற்பார்வையாளிடம் ஒப்படைக்கும் போது உங்கள் வரைதல் தாள் உலர்ந்திருக்க வேண்டும்.

**அ,ஆ,இ ஆகிய பகுதிகளுள் ஏதேனும் ஒன்றிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.**

### பகுதி அ – சித்திர ஒழுங்கமைப்பு

1. வழிபாட்டு இடம் ஒன்றில் தீ மிதிப்பு வைபவம்
2. பயிர்ச்செய்கை நிலத்தில் நாற்று நடும் பெண்கள்.
3. கடலுக்குச் சென்ற மீனவர்கள் கடல் அலையில் தத்தளித்தல்.
4. கிராமத்துக்குள் புகுந்த யானைக் கூட்டம்.

### பகுதி ஆ – அலங்கார ஆக்கம்

5. அழகிய மட்கூசா ஒன்றிற்கான அலங்காரம்.
6. மேசை விரிப்பு ஒன்றுக்கு பொருத்தமான அழகிய அலங்காரம் ஒன்றினை நிர்மாணிக்குக.
7. குழந்தைகளின் படுக்கை விரிப்பிற்கான பரவரூப அலங்காரம் ஒன்றினை வடிவமைக்குக.

### பகுதி இ - கிறபிக் சித்திரம்

8. சிறுவர்களின் கதைப் புத்தகம் ஒன்றிற்கான முகப்பு அட்டை ஒன்றை நிர்மாணிக்குக.
9. புதிதாக அறிமுகமாகும் பழரசப் போத்தல் ஒன்றிற்கான விளம்பரச் சுட்டி ஒன்றை வடிவமைக்குக.
10. மதுவை ஒழிப்போம் என்ற தலைப்பிலான சுவரொட்டி ஒன்றை நிர்மாணிக்குக.

(30 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk